மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC.100/2022 |
| பெயர் | : | குமரவேல்(PW3) |
| த/பெ. | : | மருதைய்யா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Balakrishnan, A2 Pattu @ Pattukani and A3 Lakshmana perumal are absent. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of June 2024

**முதல் விசாரணை**

1) நான் ஊத்துமலையில் வசிக்கிறேன். நான் காத்தாடி கம்பெனியில் சர்வேயராக பணியாற்றுகிறேன். சாட்சி சப்பாணியை தெரியும்.

2)என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 14.03.2021 அன்று காலை 06.00 மணிக்கு சிங்கத்தாகுறிச்சி கிராமம் சர்வே எண்.735 ல் சர்வே செய்து கொண்டிருக்கும் போது புளியம்பட்டி போலிசார் அங்கு வந்தனர். அவர்கள் என்னிடம் பிரச்சனை நடந்த இடத்தை கேட்டார்கள். நான் காண்பித்து கொடுத்தேன். அவர்கள் அதை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டார்கள். அதில் நானும் சாட்சி சப்பாணியும் சாட்சி கையொப்பம் செய்தோம் (**மேற்படி பார்வை மகஜர்அசா ஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு எழுத படிக்க தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மாதிரி வரைபடத்தில் மண்தடம் என்று காட்டியுள்ளார்கள் அதை எண். 1 என்று குறியீடு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதே மாதிரி வரைபடத்தில் கன்டெய்னர் பெட்டியை எண் 7 என்று குறியீடு செய்துள்ளார்கள் என்றால்

சரிதான்.அதே போல் சம்பவ இடமாக காட்டப்படும் இடத்திற்கு மேல் பக்கம் தான் காத்தாடி இறகு உள்ளது . அதனை மாதிரி வரைபடத்தில் எண்.3 என்று குறியீடு செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.